டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 31.01.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 184 - Madurai | Online Edition

# விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்குவதே நோக்கம்

## பொருளாதார ஆய்வறிக்கை தகவல்

புது தில்லி, ஜன.30

விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்குவதே நோக்கமாகக் கொண்டு கொள்கை வகுப்பு, உற்பத்தி மேம்பாடு, நிறுவனமய மாக்கல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பருப்பு உற்பத்தியில் தற்சார்பு நிலையை அடையும் நோக்கில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்த அறிக்கை மேலும் கூறுகிறது. சமையல் எண்ணெய் உற்பத்தி 2023-24ம் ஆண்டில் 121.75 லட்சம் டன்னாக இருந்தது என்று இதன் மூலம் 2015-16-ம் ஆண்டில் 62.3 சதவீதமாக இருந்த சமையல் எண்ணெயின் இறக்குமதி 2023-24ம் ஆண்டில் 56.25 சதவீதமாக குறைந்துள்ளது என்று பொருளாதார ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.

பிரதமரின் ஜனதான்ய விவசாயிகள் திட்டத்தின் கீழ், 100 வேளாண் மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதில் கூறப் பட்டுள்ளது. பிரதமரின் பயிர்க் காப்புத் திட்டத்தின் கீழ், 4.19 கோடி விவசாயிகளுக்கு காப்பீடு வசதிகள் கிடைத்துள்ளதுடன் 2023ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2025-ம் ஆண்டு காப்பீடு செய்து உள்ள விவசாயிகளின் எண்ணிக்கை 32 சதவீதம் அதிகரித்து உள்ளதாக பொருளாதார ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# மண் பரிசோதனை நிலையம் மற்றும் உரக்கட்டுப்பாட்டு ஆய்வத்தில் ஸ்டாமின் இயக்குநர் ஆய்வு

சேலம், ஜன.30

புதுக்கோட்டை குடுமியான்மலை ஸ்டாமின் இயக்குநர்/ வேளாண்மை கூடுதல் இயக்குநர், சங்கரலிங்கம், சேலம் மாவட்ட மண் பரிசோதனை நிலையம், உரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகங்களை நேரில் திடீராய்வு மேற்கொண்டார்.




ஆய்வின் போது மண் பரிசோதனை நிலையத்தில் மண் ஆய்வு இலக்கு சாதனை பதிவேடுகளை பார்வையிட்டு பரிசோதனைகளை துரிதமாக மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கினார். மேலும் உரக்கட்டுப்பாட்டு ஆய்வகத்தின் பணிகள் மற்றும் தரப்பரிசோதனை பணிகளை ஆய்வு செய்து பணிகளை உரிய காலத்தில் முடிக்குமாறு அறிவுறுத்தினார். பின்னர் உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் 2025-26 ஆண்டிற்கான உற்பத்தி இலக்கினை ஜனவரி 2026க்குள் காலத்தே உற்பத்தி மேற்கொண்டு வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு விநியோகித்திட அறிவுரை வழங்கினார். நடமாடும் மண் பரிசோதனை வாகனத்தை ஆய்வு மேற்கொண்டார்.

மேற்கண்ட இந்த திடீராய்வின் போது சேலம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சீனிவாசன், வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) கண்ணன், வேளாண்மை உதவி இயக்குநர் (தகவல் மற்றும் தரக் கட்டுப்பாடு) கௌதமன், சேலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொறுப்பு) கவிதா, வேளாண்மை அலுவலர்கள் தனலட்சுமி, ராதா ருக்மணி, பிரியங்கா, புஷ்பராணி, செல்வராஜ் மற்றும் அசோக் குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் காளான் மற்றும் முருங்கையிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி

கோயம்புத்தூர், ஜன.30

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் காளான் மற்றும் முருங்கையிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி 03.02.26 மற்றும் 04.02.26 ஆகிய இரண்டு நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை, அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், (பேருந்து நிறுத்தம் : வாயில் எண்.7, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், மருதமலை சாலை வழி) கோயம்புத்தூரில் நடைபெறும்.

கீழ்கண்ட உணவு பொருட்களை தயாரிப்பதற்கு பயிற்சி வழங்கப்படும்.

- முருங்கை – முருங்கை பொடி, பருப்பு பொடி, சாம்பார் பொடி, பிஸ்கட், அடை மிக்ஸ், ஊறுகாய், நூடுல்ஸ்

- காளான் – காளான் பொடி, சூப் மிக்ஸ், பிஸ்கட், ஊறுகாய், பிழிதல் தொழில் நுட்பம்ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1500 + GST 18%) – பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும். பயிற்சிக்கு அதிகபட்சம் 30 உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுவார்கள். முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 003. தொலைபேசி எண் : 0422 6611268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# பழங்கள் மற்றும் காய்கறிகள் ஏற்றுமதி பற்றி அறிய வேண்டுமா? ஓர் அரிய வாய்ப்பு!

கோயம்புத்தூர், ஜன.30

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தில் பழங்கள் மற்றும் காய்கறிகள் ஏற்றுமதி வாய்ப்புகள் குறித்து இரண்டு நாட்கள் பயிற்சி வழங்கப்பட விருக்கின்றது. இப்பயிற்சியில் உழவர்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், மகளிர், இறுதி ஆண்டு பட்டதாரி மாணவ, மாணவி-யர்கள், இதர பட்டதாரிகள், இளைஞர்கள் மற்றும் தொழில் முனை வோர்கள் பங்கு பெறலாம். இப்பயிற்சி வேளாண் வணிக மேம்பாட்டு இயக்கக வளாகத்தில் வரும் 03.02.26 மற்றும் 04.02.26 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது. பயிற்சி கட்டணம் நபர் ஒருவருக்கு ரூ.3540/- (சரக்கு மற்றும் சேவை வரி 18% உள்பட). பயிற்சிக்கு குறைந்த எண்ணிகையிலான இடங்களே உள்ளன.

**பதிவுக்கு தொடர்பு கொள்ள :**

மின்னஞ்சல் : **business@tnau.ac.in**
தொலைபேசி எண் : 0422 - 6611310
கைபேசி எண் : **82206 61228**

# டிராகன் பழ தோட்டத்தைப் பார்வையிட்டு சாகுபடி மற்றும் மேலாண்மை முறைகளை அறிந்த வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், ஜன.30

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டாரத்தில் 10/01/26 அன்று குச்சிக்காடு கிராமத்தில் கிராமப்புற மற்றும் விவசாயப்பணி அனுபவம் என்ற வேளாண் பயிற்சியின் கீழ் துறையூரில் உள்ள இமயம் வேளாண்மை மற்றும் தொழில் நுட்பக் கல்லூரியின் இறுதி ஆண்டு மாணவிகளான அபி.E, அபிநயா ஸ்ரீ.S, அனிசா.P, அர்த் ஃபர்ஹானா.S, அனுஜா.R, அஸ்மிதா.D, அட்சயா.K, பீயூலா ஏஞ்சல்.M, சித்ரா தேவி.R, தாரணி.S குழு எண் 1 குச்சிக்காட்டைச் சார்ந்த வழக்கறிஞர் இராஜேந்திரனின் டிராகன் பழம் (Dragon fruit) தோட்டத்தைப் பார்வையிட்டனர். மேலும் டிராகன் பழம் சாகுபடி, பராமரிப்பு, நோய் மற்றும் பூச்சி தாக்குதல், டிராகன் பழத்தை விளைவிப்பதற்கான முக்கிய கூறுகளை அறிந்து கொண்டனர்.

**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

நன்றி

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

# கிராம சபா கூட்டத்தில் பங்கேற்று அலவலர்களுடன் கலந்துரையாடிய வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், ஜன.30

நாமக்கல் மாவட்டம், அரசபாளையத்திற்கு கிராம சபா கூட்டத்திற்கு பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரியை சேர்ந்த மாணவிகள் ஸ்ரீஷா, ஸ்ரீ ஷங்கரி, சுமித்ரா, சுவிதா, சொர்ணாம்பிகா, சுவட்சனா மற்றும் சுவாதி ஆகியோர் சென்று, கிராம நிர்வாக அலுவலர் (விஏஓ) மற்றும் அரசபாளையம் கிராம மக்களுடன் கொடி ஏற்றும் விழாவில் கலந்து கொண்டோம். கிராம சபை கூட்டம் தொழுநோய் மற்றும் போதை எதிர்ப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் உறுதிமொழியுடன் தொடங்கியது. விழாவில் மாவட்ட ஆட்சியர் துர்கா மூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர் மதிவேந்தன், தோட்டக் கலை துணை இயக்குநர் - டிடிஹெச், காவல்துறை அதிகாரி, ஒருங்கிணைந்த வேளாண் இயக்குநர் (ஜேடிஏ), தனலட்சுமி (வேளாண் உதவி இயக்குநர் - ஏடிஏ) மற்றும் கார்த்திகா (தோட்டக் கலை உதவி இயக்குநர் - ஏடிஹெச்), கிராம நிர்வாக அலுவலர் (விஏஓ), வேளாண் உதவி அலுவலர் (ஏஏஓ), வேளாண் அலுவலர் (ஏஓ), கால்நடை மருத்துவர், சுகாதார அலுவலர் கிராம சபாவிற்கு வருகை தந்தனர். ஜேடிஏ வேளாண்மை மற்றும் தோட்டக்கலை தொடர்பான திட்டங்கள் குறித்து விவாதித்தார். திட்டங்கள் குறித்த விழிப்புணர்வுகளை அலுவலர்கள் விவாதித்தனர். கால்நடை மருத்துவர் கிராம மக்களுடன் பேசினார். மக்களுக்கு கிடைக்கும் சேவைகள் குறித்து விவாதித்தனர். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச்சட்டம், தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம், சுத்த பாரதம், ஜல் ஜீவன் திட்டம், தமிழ்நாடு பெண் தொழில்முனைவோர் மேம்பாடு திட்டங்கள், சுய வேலைதிட்டம் மற்றும் ராஷ்ட்ரிய கிராம திட்டம் குறித்து கிராம மக்களுடன் ஆட்சியர் பேசினார். மதிவேந்தன் (எம்பி) கலைஞர் கனவு இல்லம் போன்ற புதிய திட்டங்கள் குறித்து பொது மக்களின் கருத்தை கேட்டறிந்தார்.

டெங்கு காய்ச்சல், தொழுநோய் கட்டுப்படுத்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நாங்கள் எங்கள் யூபுநிசி திட்டம் குறித்து எம்பி மதிவேந்தன் ஆட்சியர் துர்கா மூர்த்தியுடன் உரையாடினோம்.

VASANTHAM Agri Tech

# வசந்தம் அக்ரிடெக்

தலைமை அலுவலகம்: 129/1ஏ2, வண்டியூர் ரிங் ரோடு,
சங்கு நகர், மதுரை, தமிழ்நாடு-625020.

கிளைகள்:-மதுரை,சிவகங்கை,திருநெல்வேலி

## 1 பவர் வீடர் = 40 வேலை ஆட்கள்

## இப்போது அரசு மானியத்தில்



Sarathi i06

- 40% - பெரிய விவசாயி
- 50% - பெண்கள் / SC/ST
- 60% - சிறுகுறு விவசாயி
- 70% - சிறுகுறு விவசாயி & SC/ST

**மானியத்திற்கு விண்ணப்பிக்க தேவையான ஆவணங்கள்**

- ஆதார்
- புகைப்படம்
- பட்டா
- அடங்கல்
- சாதிச் சான்றிதழ் (தகுதி இருந்தால்)
- சிறுகுறு விவசாயி சான்றிதழ்



Yield max VT 260

**உடனடி மானியம் உள்ள மாவட்டங்கள்**

- மதுரை
- சிவகங்கை
- விருதுநகர்
- ராம்நாடு



Sirachi 8D6

1,22,344 மதிப்புள்ள 9 HP டீசல் பவர் வீடர்,SC மற்றும்
சிறு விவசாயிக்கு 36,703 மட்டுமே

இப்போதே விண்ணப்பியுங்கள் +91 75400 66652

# வேளாண் மகளிருக்கான மாற்று வாழ்வாதார – அறுவடை பின்சார் பயிற்சி



கன்னியாகுமரி, ஜன.30

கோவை, வேளாண்மை பல்கலைக்கழகம் வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம் மற்றும் திருப்பதி சாரம் வேளாண்மை அறி வியல் நிலையம் ஆகியவை இணைந்து நடத்திய வேளாண் மகளிருக்கான மாற்று வாழ்வாதாரப் பயிற்சி 30.1.26 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர் மற்றும் திட்ட ஒருங்கிணைப் பாளர் முனைவர் சா சுரேஷ், தலைமை வகித்தார். அவர்தம் தலைமை உரையில் வேளாண் மகளிருக்கான சிறுதொழில் வாய்ப்புகள் மற்றும் சந்தைப் படுத்துதல் குறித்து எடுத்துரைத்தார். வேளாண்மை துணை இயக்குனர் முனைவர் ஃப் ஜோஸ், தனது சிறப்புரையில் கிராமப்புற வேலைவாய்ப்புகள் மற்றும் சந்தைப் படுத்துதல் மற்றும் பல்வேறு அரசு திட்டங்களை குறித்து விவரித்தார். வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள் மற்றும் விளை பொருட்கள் மதிப்பு கூட்டல் குறித்து முனைவர் ஜெ செல்வி, உதவி பேராசிரியர் (உணவியல் மற்றும் சத்தியல்), விளக்கமாக எடுத்துரைத்தார். உணவுத் தரம் மற்றும் கட்டுப்பாடு சான்றிதழ் (FSSAI) மற்றும் தொழிமுனைவோர் உருவாக்குதலில் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் பங்கு குறித்து முனைவர் கு கவிதா, இணை பேராசிரியர் (பயிர் நோயியல்), எடுத்துரைத்தார். இந்த பயிற்சி முகாமில் அறுவடை பின்சார் தொழில்நுட்ப பயிற்சி கையேடு வெளியிடப்பட்டது. மேலும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்க எண்ணெய் பிரித்தெடுக்கும் இயந்திரம் மற்றும் உலர் தானியங்கள் அரவை இயந்திரம் ஆகியவற்றின் செயல்முறை விளக்கம் நடைபெற்றது. இந்நிகழ்வில் கன்னியாகுமரி மாவட்டத்தின் நான்கு வட்டாரங்களை சேர்ந்த 40 வேளாண் மகளிர் கலந்து கொண்டு பயன் அடைந்தனர். இந்நிகழ்வில் முனைவர் சா நஸ்ரின் ஹசன், இணை பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்) நன்றியுரை கூறினார்.

# தென்னை நார்க்கழிவு கொண்டு தழைக்கூளம் அமைத்தல் பயிற்சியளித்த வேளாண் மாணவி

மதுரை, ஜன.30

மதுரை வேளாண் கல்லூரியின் இறுதியாண்டு மாணவி தர்ஷினி கோபிநாத், மொட்டனுத்து கிராமத்தில் தென்னை விவசாயிகளுக்காக, தென்னை நார்க்கழிவு கொண்டு தழைக்கூளம் அமைத்தல், என்ற தலைப்பில் கள விளக்கம் மற்றும் பயிற்சி நிகழ்ச்சியை நடத்தினார். இந்த நிகழ்ச்சி RAWE





(கிராம வேளாண் பணிப் பயிற்சி) திட்டத்தின் கீழ் நடைபெற்றது. கிராமத்தைச் சேர்ந்த பல விவசாயிகள் இதில் கலந்து கொண்டு ஆர்வமுடன் பயிற்சியை பார்வையிட்டனர்.

இந்த பயிற்சியில் தென்னை நார், தேங்காய் ஓடு போன்ற கழிவுகளை எவ்வாறு தென்னை மரங்களின் அடிப்பகுதியில் பரப்பி தழைக்கூளம் அமைக்க வேண்டும் என்பதை தர்ஷினி நேரடியாக செய்து காட்டினார். இதனால் மண்ணில் ஈரப்பதம் நீடித்து, களை வளர்ச்சி குறைந்து, மண் வளம் அதிகரிக்கும் என்று விவசாயிகளுக்கு விளக்கினார்.

இந்த முறையில் எந்த கூடுதல் செலவும் இல்லாமல் தங்களிடம் கிடைக்கும் தென்னை நார்க்கழிவுகளை பயன்படுத்தி தோட்டங்களில் தழைக்கூளம் அமைக்கலாம் என்பதால் விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டனர். பயிற்சி முடிவில் பலர் இந்த முறையை தங்கள் தோட்டங்களில் உடனடியாக நடைமுறைப் படுத்துவோம் என்று தெரிவித்தனர்.

## சிவப்பு கூன் வண்டு மேலாண்மைக்கு பயன்படுத்தப்படும் பெரோமோன் பொறி




நாமக்கல், ஜன.30

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், காலப்ப நாயக்கன்பட்டி கிராமத்தில் உள்ள விவசாயியான இளங்கோ என்பவரின் தென்னந்தோப்பை வேளாண்மை கல்லூரி மாணவிகள் பார்வையிட்டனர். அப்போது அவரது தோட்டத்தில் சிவப்பு கூன் வண்டின் தாக்குதல் அதிகமாக உள்ளதை கண்டறிந்தனர். அதற்கு பெரோமோன் பொறியை தயார் செய்து, ஆண் வண்டுகளை கவரக்கூடிய கவர்ச்சி பொருளான வாசனை பொருளை அதில் பொறுத்தி அவரது தென்னந்தோப்பில் பொருத்தினார் மற்றும் அதனை பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகளை பற்றியும் விளக்கினார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# மண்ணையும் மக்களையும் காக்க நாம் என்ன செய்ய வேண்டும்?

ஒரு காலத்தில் விவசாய உற்பத்தியைப் பல மடங்காகப் பெருக்க வந்த அபூர்வங்கள் என இரசாயன உரங்களையும், பூச்சிக் கொல்லி மருந்துகளையும் ஐரோப்பிய நாடுகள் கொண்டாடின. ஆனால் இவைகளால் பெரிய பலன்கள் எதுவும் கிடையாது என்பதை தற்போது உணரத் தொடங்கி விட்டன. இருக்கிற வளங்களையும் அழித்து விடக் கூடியவை என்பதையும் அந்த நாடுகள் தெரிந்து கொண்டன. அந்த நாடுகள் எல்லாம் இயற்கை விவசாயத்தை நோக்கி மீண்டும் வேகமாக திரும்பிக் கொண்டிருக்கிறது என்பது குறிப்பிடத் தக்கது.

**நம்முடைய நாட்டின் நிலை?**

நம்முடைய இந்தியாவில் பெருகி வரும் மக்கள் தொகையின் உணவுத்தேவையை சமாளிக்க பசுமைப்புரட்சி தான் ஒரு தீர்வாக நம்பி கண்ட கண்ட உரங்களையும் பூச்சிக் கொல்லி களையும் போட்டு நம்முடைய மண்ணையும் மக்களையும் பாழாக்கி விட்டோம். ஒரு காலத்தில் மகசூலை அள்ளிக் கொடுத்த நிலங்கள் இன்று வளமிளந்து மகசூலை கிள்ளிக் கொடுக்கின்றதை நாம் கண்கூடாக பார்க்கிறோம்.

**இன்றைய விவசாயிகளின் நிலைமை?**

விவசாயிகள் மகசூலை அடையவதற்கு கண்ட கண்ட உரங்களை போட்டு மண்ணில் நுண்ணுயிர்களை அழித்து வருகின்றனர். ஒரு விவசாயிக்கு ஒரு விவசாயி போட்டி போட்டு உரங்களை போடுவதை நாம் கண்கூடாக பார்க்கிறோம். இத்தனை ஆண்டுகளுக்கு பிறகும் நம்முடைய நாட்டில் பசுமையும் வளரவில்லை, 40% மக்கள் இன்னும் கூட 3 வேளை உணவு கிடைக்காதவர்கள், வறுமைக் கோட்டுக்கு கீழே வாழ்பவர்கள் 40% மேல் இருப்பதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

இது ஒரு பக்கம் இருக்க அதிகளவாக உரம் போடுவதால் நம்முடைய விவசாயிகள் கடனாளி ஆனது தான் மிச்சம். தானும் கெட்டு மண்வளமும் கெட்டு, மண்ணை நஞ்சாக்கி

தானும் கெட்டு மண்வளமும் கெட்டு, மண்ணை நஞ்சாக்கி விட்ட பிறகு, மக்கள் 40 வயதிலே பல்வேறு நோய்களுக்கு அடிமையாகி நோயாளி ஆனதும் தான் மிச்சம்.

**இதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?**

1) இயற்கை விவசாயம் செய்பவர்களுக்கு அரசு தனி கவனம் செலுத்தி ஊக்குவிக்க வேண்டும்.

2) இயற்கை விளைபொருட்களுக்கு தனியாக MSP (குறைந்த பட்ச ஆதார விலை) நிர்ணயிக்க வேண்டும்.

3) ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க முறையை விவசாயிகள் கையாள வேண்டும்.

நம்மாழ்வார், சுபாஷ் பாலேக்கர் வழியில் இயற்கை விவசாயத்தை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு விதை, இயற்கை உரங்கள், இயற்கை பூச்சிக் கொல்லிகள் மானிய விலையில் வழங்க வேண்டும்.

4) NPOP, PGS INDIA ORGANIC CERTIFICATION முறை களை விவசாயிகளிடத்தில் கொண்டு செல்ல வேண்டும்.

5) ஒரு நாட்டு பசு மாடு இருந்தால் 30 ஏக்கர் விவசாயம் செய்யலாம் எனக்கூறி வரும் சுபாஷ் பாலேக்கர் வழியில் விவசாயிகளுக்கு பாரம்பரிய நாட்டு மாடுகளை இலவசமாக வழங்க வேண்டும்.

6) ஜெய் விக் பாரத்' என்ற மத்திய அரசின் இணைய தளத்தை பயன்படுத்த இயற்கை இடுபொருட்களை வாங்கிடவோ, விற்பனை செய்யவோ, பயன்படுத்திடலாம். இது குறித்த விழிப்புணர்வு விவசாயிகளுக்கு ஏற்படுத்திட வேண்டும்.

இனி வருங்கால சந்ததியினருக்கு நஞ்சில்லா உணவையும் வளமான மண்ணையும் பாதுகாத்து வழங்கிடுவோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

# பங்கேற்பு கிராம மதிப்பீட்டு நடத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்





நாமக்கல், ஜன.30

நாமக்கல் பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரியில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள் தங்களது இறுதி ஆண்டு பாடத்திட்டமான கிராமத்தில் தங்கி வேளாண் பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் பிள்ளூர் கிராமத்தில் பங்கேற்பு கிராம மதிப்பீட்டு (Participatory Rural Appraisal - PRA) பயிற்சி சிறப்பாக நடத்தப்பட்டது. இந்த பயிற்சியில் கிராம மக்கள், விவசாயிகள், பெண்கள் மற்றும் இளைஞர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு தங்களின் கிராம வளர்ச்சிக்கான கருத்துகளை பகிர்ந்து கொண்டனர்.

பயிற்சியின் ஒரு பகுதியாக பிரச்சனை மரம் உருவாக்கப்பட்டு, கிராமத்தில் உள்ள முக்கியமான சமூக, பொருளாதார மற்றும் விவசாயப் பிரச்சனைகள், அவற்றின் காரணங்கள், விளைவுகள் குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும், சமூக வரைபடம் மூலம் வீடுகள், பொதுச் சொத்துகள், சாலைகள், குடிநீர் வசதிகள் உள்ளிட்ட விவரங்கள் குறிக்கப்பட்டன. அதே போல், பயிர் நாட்காட்டி தயாரிக்கப்பட்டு, பருவக்கால பயிர்கள், விதைப்பு மற்றும் அறுவடை காலங்கள், மழை நிலை, வேலை வாய்ப்பு காலங்கள் குறித்து பகுப்பாய்வு செய்யப்பட்டது. கிராம மக்களின் பொருளாதார நிலையை அறியும் வகையில் செல்வ நிலை வரிசைப்படுத்தல் செயல்பாடும் மேற்கொள்ளப்பட்டது.


இந்த PRA பயிற்சி மூலம் கிராம மக்களின் நேரடி பங்கேற்புடன் பிரச்சனைகள் அடையாளம் காணப்பட்டு, எதிர்கால வளர்ச்சி திட்டங்களை திட்டமிட உதவியாக இருந்தது. கிராமத்தின் நிலைத்த வளர்ச்சிக்கு இந்த பயிற்சி முக்கியமானதாக அமைந்தது என பங்கேற்பாளர்கள் தெரிவித்தனர்.

# பயனுள்ள பூச்சிகளின் பயன்பாடு

# [Use of Beneficial Insects]

அறிமுகம் : விவசாயத்தில் பூச்சிகள் என்பது பொதுவாக பயிர்களை அழிக்கும், விவசாயிக்கு நஷ்டம் ஏற்படுத்தும் உயிரினங்களாகவே பார்க்கப்படுகின்றன.

இதன் காரணமாக பல ஆண்டுகளாக விவசாயத்தில் ரசாயன பூச்சிக்கொல்லிகள் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.



ஆனால் இயற்கையில் உள்ள அனைத்து பூச்சிகளும் தீங்கு விளைவிப்பவை அல்ல. மாறாக, சில பூச்சிகள் பயிர் வளர்ச்சி, பூச்சி கட்டுப்பாடு, மகரந்தச் சேர்க்கை மற்றும் மண் வள மேம்பாடு போன்ற பல்வேறு வழிகளில் விவசாயத்திற்கு மிகுந்த நன்மை அளிக்கின்றன. இவ்வகை பூச்சிகள் பயனுள்ள பூச்சிகள் (Beneficial Insects) என அழைக்கப்படுகின்றன. இவை இயற்கை வேளாண்மை மற்றும் நிலையான விவசாய முறைகளின் அடிப்படை ஆதாரங்களாக விளங்குகின்றன.

### பயனுள்ள பூச்சிகளின் வகைகள்

#### 1. மகரந்தச் சேர்க்கை செய்யும் பூச்சிகள்

தேனீ, வண்ணத்துப்பூச்சி, ஈ, வண்டு போன்ற பூச்சிகள் மலர்களிலிருந்து தேன் மற்றும் மகரந்தத்தை சேகரிக்கும் போது, ஒரு மலரிலிருந்து மற்றொரு மலருக்கு மகரந்தத்தை எடுத்துச் செல்கின்றன. இதன் மூலம் மகரந்தச் சேர்க்கை நடைபெறுகிறது. மகரந்தச் சேர்க்கை இல்லாமல் பல பயிர்கள் பழம் தர முடியாது. காய்கறிகள், பழ வகைகள், எண்ணெய் விதைகள் மற்றும் பணப் பயிர்கள் ஆகியவற்றின் உற்பத்தியில் தேனீகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மகரந்தச் சேர்க்கை அதிகரிப்பதால் பழத்தின் அளவு, வடிவு, தரம் மற்றும் விதை உருவாக்கம் மேம்படுகிறது.

#### 2. பூச்சி வேட்டையாடிகள் (Predators)

லேடி பீட்டில் (Ladybird beetle), சில்லிங், சிலந்தி, பிரேயிங் மாண்டிஸ், தட்டான் போன்ற பூச்சிகள் பயிர்களைத் தாக்கும் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை நேரடியாக வேட்டையாடி உண்ணுகின்றன. உதாரணமாக, லேடி பீட்டில் பூச்சிகள் இலைப்பூச்சிகள் (Aphids), வெள்ளை ஈக்கள் மற்றும் சிறிய புழுக்களை அழிக்கின்றன. இதனால் பயிர்களின் இலைகள், தண்டு மற்றும் பூக்கள் பாதுகாக்கப்படுகின்றன. இவை இயற்கையான பூச்சிக் கொல்லிகளாக செயல்பட்டு, ரசாயன மருந்துகளின் தேவையை குறைக்கின்றன.

#### 3. பராசிட்டாய்ட்கள் (Parasitoids)

ட்ரைக்கோகிராம்மா (Trichogramma), பிராகோனிட், இக்னியுமோனிட் போன்ற பராசிட்டாய்டு பூச்சிகள் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளின் முட்டைகள், இளம் புழுக்கள் அல்லது உடலுக்குள் தங்கள் முட்டைகளை இடுகின்றன. இதன் மூலம் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளின் வளர்ச்சி தடைபட்டு அவை அழிக்கப்படுகின்றன. பராசிட்டாய்ட்கள் உயிரியல் பூச்சி கட்டுப்பாட்டில் முக்கிய கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவை பயிர்களுக்கு எந்த தீங்கும் விளைவிக்காமல் பூச்சிகளை கட்டுப்படுத்துகின்றன.

### 4. சிதைவு செய்யும் பூச்சிகள்

சில பூச்சிகள் மண்ணில் உள்ள பயிர் எச்சங்கள், உதிர்ந்த இலைகள், உயிர் கழிவுகள் ஆகியவற்றை சிதைக்க உதவுகின்றன. இதன் மூலம் கரிமப் பொருட்கள் மண்ணில் கலந்து மண் வளம் அதிகரிக்கிறது. மண்ணில் நுண்ணுயிர்களின் செயல்பாடு அதிகரித்து, பயிர்களுக்கு தேவையான ஊட்டச்சத்துகள் இயற்கை யாக கிடைக்கின்றன. இவ்வகை பூச்சிகள் மண் ஆரோக்கியத்தை பாதுகாக்கும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

### பயனுள்ள பூச்சிகளின் பயன்பாடு

● ரசாயன பூச்சிக்கொல்லிகள் மற்றும் உரங்களின் பயன்பாட்டை குறிப்பிடத்தக்க அளவில் குறைக்கின்றன

● பயிர்களை இயற்கை முறையில் பாதுகாத்து நிலையான விளைச்சலை வழங்குகின்றன

● விவசாய உற்பத்தி செலவுகளை குறைத்து விவசாயியின் வருமானத்தை உயர்த்துகின்றன

● மண், நீர் மற்றும் காற்று மாசுபாட்டை குறைக்க உதவுகின்றன

● மனித ஆரோக்கியம் மற்றும் கால்நடை ஆரோக்கியத்தை பாதுகாக்கின்றன

● உயிரியல் பல்வகைமை (Biodiversity) பாதுகாக்கப்படுகிறது

### இயற்கை வேளாண்மையில் பயனுள்ள பூச்சிகளின் பங்கு

இயற்கை வேளாண்மை முறையில் பயனுள்ள பூச்சிகள் முதன்மையான இடத்தைப் பெறுகின்றன. ரசாயன பூச்சிக்கொல்லிகள் தவிர்க்கப்படுவதால், பயனுள்ள பூச்சிகளின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. இதனால் தீங்கு விளைவிக்கும் பூச்சிகள் இயற்கை யாக கட்டுப்படுத்தப்படுகின்றன.

இயற்கை சமநிலை நிலைநிறுத்தப்படுகிறது. நீண்ட காலத்தில் மண் வளம் மேம்பட்டு, பயிர்களின் உற்பத்தி திறன் அதிகரிக்கிறது.
பயனுள்ள பூச்சிகளை பாதுகாக்கும் வழிகள்

● தேவையற்ற ரசாயன பூச்சிக்கொல்லிகளை தவிர்க்க வேண்டும்

● கலப்பு பயிர் முறை மற்றும் பயிர் சுழற்சி முறைகளை பின்பற்ற வேண்டும்

● பூச்சிகளுக்கு ஏற்ற பூக்கும் செடிகளை விளிம்புகளில் வளர்க்க வேண்டும்

● இயற்கை பூச்சி கட்டுப்பாட்டு முறைகளை பயன்படுத்த வேண்டும்.

முடிவுரை : பயனுள்ள பூச்சிகள் விவசாயத்தின் அமைதியான பாதுகாவலர்கள் ஆகும். இவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து பாதுகாத்து வளர்ப்பது இன்றைய விவசாயத்தின் அவசியமாகும். ரசாயன சார்ந்த விவசாயம் குறைந்து, இயற்கை மற்றும் நிலையான வேளாண்மை வளர்வதற்கு பயனுள்ள பூச்சிகள் அடித்தளமாக விளங்குகின்றன. எதிர்கால தலைமுறைகளுக்கு பாதுகாப்பான உணவு மற்றும் ஆரோக்கியமான சூழலை வழங்க பயனுள்ள பூச்சிகள் தவிர்க்க முடியாதவை.

தகவல் : மேலும் விவரங்களுக்கு **மு.தேவிகா, இளங்கலை வேளாண் மாணவி மற்றும் முனைவர் பா.குணா, இணைப் பேராசிரியர், வேளாண் விரிவாக்க துறை, சு.சந்தியா, உதவி பேரா சிரியர் மற்றும் குழு மேற்பார்வையாளர், நாளந்தா வேளாண்மை கல்லூரி, எம்.ஆர்.பாளையம், திருச்சி. மின்னஞ்சல் : baluguna 8789@gmail.com, தொலைபேசி எண்: 99446 41459** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.


# முத்துகொண்டாபுரத்தில் விவசாயிகளுக்கான விழிப்புணர்வு கூட்டம்

திருவள்ளூர், ஜன.30

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், முத்துகொண்டாபுரம் கிராமத்தில் விவசாயிகளுக்கான விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது.



இக்கூட்டத்தில் இயற்கை மற்றும் உயிர் வேளாண்மை முறைகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது. குறிப்பாக பஞ்சகவ்யா, வேம்பு விதை சாறு (Neem Seed Extract), எருக்கா பூ கரைசல், பழங்காடி, உயிர் உரங்கள் (Biofertilizer) ஆகியவற்றின் தயாரிப்பு முறை, பயன்பாடு மற்றும் பயன்கள் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் அதிகப்படியான பயன்பாடு மண்ணின் வளத்தையும் மனித ஆரோக்கியத்தையும் பாதிப்பதை சுட்டிக்காட்டி, இயற்கை வேளாண்மைக்கு மாறுவதின் அவசியம் வலியுறுத்தப்பட்டது. இந்த இயற்கை உள்ளீடுகள் மூலம் மண்ணின் உயிர்ச்சத்து மேம்படும், பயிர்களின் வளர்ச்சி சீராக இருக்கும், செலவுகள் குறையும் மற்றும் உற்பத்தி தரம் உயரும் என விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் தங்களின் சந்தேகங்களை முன்வைத்து, இயற்கை விவசாய முறைகளை தங்கள் வயல்களில் நடைமுறைப்படுத்த ஆர்வம் தெரிவித்தனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# மதுரை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 17-வது அறிவியல் ஆலோசனைகுழு கூட்டம்



மதுரை, ஜன.30

மதுரை, வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 17வது அறிவியல் ஆலோசனை குழு கூட்டமானது 30.01.26 அன்று நடைபெற்றது. இவ் விழாவானது முனைவர் பி.பொ.முருகன், விரிவாக்க கல்வி இயக்குனர் விரிவாக்க கல்வி இயக்குனரகம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயமுத்தூர், தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவினை முனைவர் இ.சுப்பிரமணியன், திட்ட ஒருங்கிணைப்பாளர் வேளாண்மை அறிவியல் நிலையம், வரவேற்புரை வழங்கி கடந்த வருடம் பரிந்துரைக்கப்பட்ட ஆலோசனை குழு பரிந்துரைகளுக்கு வேளாண்மை அறிவியல் நிலையத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

முனைவர் இ.சோமசுந்தரம், இயக்குநர் வேளாண் வணிக மேம்பாட்டு இயக்குனரகம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், கோயமுத்தூர் சிறப்புரையாற்றி நஞ்சு இல்லா விவசாயம் மேற்கொள்ளும் தொழில்நுட்பங்கள் மற்றும் வேளாண் விளைப் பொருட்களை சந்தைப்படுத்தும் தொழில்நுட்பங்கள் பற்றி எடுத் துரைத்தார். முனைவர் ராகவன், பேராசிரியர் மற்றும் தலைவர், உழவியல் துறை, வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட நெல் ரகங்களை அதிகளவு மதுரை மாவட்ட விவசாயிகளுக்கு பயன்படுத்தும் தொழில்நுட்பங்கள் மற்றும் செங்கரும்பு உற்பத்தி தொழில்நுட்பங்கள் பற்றிய செயல்முறை விளக்கங்கள் பற்றிய பயிற்சிகள் தேவையை அறிவுறுத்தினார்.

முனைவர் ச.காஞ்சனா, முதல்வர், சமுதாய அறிவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மற்றும் கே.பி.முருகேசன், வேளாண்மை இணை இயக்குனர், மதுரை மாவட்டம், இருவரும் சிறப்புரை ஆற்றினார்கள். அறிவியல் ஆலோசனை குழு கூட்டத்தில் இந்த வருடத்திற்கான ஆலோசனைகள் வரவேற்கப் பட்டது. அதில் முக்கியமாக இயற்கை விவசாயம் செய்ய தேவை யான நவீன தொழில்நுட்பங்கள், பருவ கால மாறுதல்களுக்கு

உட்பட்ட வேளாண் தொழில்நுட்பங்கள் தோட்டக்கலை பயிர்களில் பூச்சி மேலாண்மை, தேனி வளர்ப்பு பயிற்சிகள் தென்னை மற்றும் சிறுதானியங்கள் மதிப்புகூட்டுதல் புறக்கடை கோழி வளர்ப்பு மற்றும் செம்மறியாடு வளர்ப்பு தொழில்நுட்பங்கள், விவசாய உற்பத்தி பொருட்களுக்கு தொடர் சந்தை முறைகளை உருவாக்குதல் போன்ற தேவைகள் பற்றி ஆலோசனை குழு உறுப்பினர்கள் எடுத்துரைத்தனர்.

இவ்விழாவில் மதுரை மாவட்ட வேளாண்மை துறை, தோட்டக் கலைத் துறை, வனத்துறை கால்நடை துறை, பட்டு வளர்ப்பு துறை, சமூக நலத்துறை ஆகிய துறைகளை சார்ந்த அதிகாரிகள், மதுரை மாவட்ட விவசாய பிரதிநிதிகள் மேலும் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் பங்கேற்றனர். இவ்விழாவில் ஆதிதிராவிட மக்களுக்கு சூரிய உலர்ப்பான் மற்றும் ஆட்டுக்குட்டிகள் இலவசமாக வழங்கப்பட்டது. மேலும் வேளாண்மை அறிவியல் நிலைய இதழ் வெளியிடப்பட்டது. இவ்விழாவில் முத்தாய்ப்பாக வேளாண்மை அறிவியல் நிலையத் தால் உருவாக்கப்பட்ட பெண் தொழில் முனைவோர்களின் மதிப்பு கூட்டப்பட்ட உணவுப் பொருள்களின் கண்காட்சிக்கு வைக்கப்பட்டது.

## பார்தீனியம் களையை கட்டுபடுத்தும் குதிரைவாலி பயிர்

நாமக்கல், ஜன.30

பார்தீனியம் (Congress weed) எனப்படும் தீங்கான களை செடி விவசாய நிலங்களிலும், பொது இடங்களிலும் வேகமாகப் பரவி மனித ஆரோக்கியத்திற்கும் விவசாயத்திற்கும் கடுமையான பாதிப்பு களை ஏற்படுத்தி வருகிறது. இந்நிலையில், பார்தீனியம் களையை இயற்கை முறையில் கட்டுப்படுத்தும் நோக்கில் குதிரைவாலி (Horse gram) உயிர் மல்சிங் தொடர்பான செயல்விளக்கத்தை பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவிகள் விவசாயிகளுக்கு வழங்கினர். இந்த நிகழ்ச்சியில், குதிரைவாலி பயிரின் இலை, தண்டு போன்ற பசுமைக் கழிவுகளை மல்சிங் முறையில் ஏக்கருக்கு (25 கிலோ) நிலத்தில் பரப்புவதன் மூலம், குதிரைவாலி பயிரிலிருந்து வெளியேயும் (பீ னோளிக்) ரசாயன திரவம் களையை கட்டுபடுத்து கிறது. உயிர் மல்சிங் மூலம் மண்ணின் ஈரப்பதம் பாதுகாக்கப்படு வதுடன், மண்ணின் உயிர்ச்சத்து மற்றும் பயிர் வளர்ச்சி மேம்படும் என்றும் எடுத்துரைக்கப்பட்டது. மேலும், இரசாயன களைநாசினி களைப் பயன்படுத்தாமல், சுற்றுச்சூழலுக்கு தீங்கில்லாத இந்த இயற்கை முறையை விவசாயிகள் எளிதாகப் பின்பற்ற முடியும் என தெரிவிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் இந்த முறையை ஆர்வமுடன் கவனித்து பயனடைந்தனர்.



# கல்லூரி மாணவர்களுக்கு இப்கோ நானோ கருத்தரங்கம்

கிருஷ்ணகிரி, ஜன.30

இப்கோ சார்பில், இந்திய உர சங்கம் உரங்கள் குறித்த வழிகாட்டல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சி கிருஷ்ணகிரி ஆதியமான் வேளாண் கல்லூரி, கிருஷ்ணகிரி வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஆதியமான் வேளாண் கல்லூரியின் முதல்வர் முனைவர் யூ.சாந்தி, தலைமை தாங்கி, அறிவியல் அடிப்படையிலான ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் நிலையான வேளாண் நடைமுறைகளின் அவசியத்தை எடுத்துரைத்தார்.



நிகழ்ச்சியில் இப்கோ கள அதிகாரி கே் அப்துல்லாஹ், நானோ உரங்களின் முக்கியத்துவம் மற்றும் சாகரிகா, உயிர் ஊக்கி உரங்களின் பயன்கள் குறித்து விரிவாக விளக்கினார். நானோ உரங்கள் பயிர்களில் ஊட்டச்சத்து உறிஞ்சுதலை அதிகரித்து, மண் ஆரோக்கியத்தை பாதுகாத்து, உர செலவைக் குறைத்து மகசூலை உயர்த்தும் விதம் குறித்து மாணவர்களுக்கு தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும், நிகழ்ச்சி வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த நானோ உரங்கள் மற்றும் சாகரிகா உரங்களை மாணவர்கள் நேரில் பார்வையிட்டனர். உரங்களின் தன்மை, பயன்பாட்டு முறை மற்றும் பயிர் வாரியான நன்மைகள் குறித்து மாணவர்களுக்கு விரிவான விளக்கங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் சுமார் 300 மாணவர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். இந்த பயிற்சி நிகழ்ச்சி, வேளாண் மாணவர்களிடையே நவீன உர தொழில்நுட்பங்கள் மற்றும் நிலையான வேளாண் தீர்வுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் முக்கிய பங்காற்றியது.

**Rithvik Pipe**

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# ஊரகப் பங்கேற்பு மதிப்பீடு நடத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், ஜன.30

நாமக்கல் மாவட்டம், பி.ஜி.பி. வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவிகள் தங்களது கிராமப்புற வேளாண்மை அறிவியல் பயிற்சியின் (Rural Agricultural work experience) ஒரு பகுதியாக மணப்பள்ளி கிராமத்தில் பங்கேற்பு அடிப்படையிலான ஊரகப் பங்கேற்பு மதிப்பீடு – Participatory Rural appraisal (PRA) முறைகளை தவமணி, கிராம நிர்வாக அலுவலரின் (VAO) முன்னி லையில் நடைமுறைப்படுத்தினர். சமூக வரைபடம், வள வரைபடம், பயிர் கால அட்டவணை, பிரச்சினை மரம், வென் வரைபடம் போன்ற மாதிரிகளை அவர்கள் கிராம மக்களுடன் நேரடியாக இணைந்து உருவாக்கினர். PRA செயல்முறையின் போது மாணவிகள் கிராம மக்கள் வாழ்வாதாரம், சமூக அமைப்பு, வளங்களின் தன்மை, முக்கிய பயிர்கள், காலநிலை சார்ந்த விவசாயச் சுழற்சி, கிராமத்தின் உட்புற பிரச்சினைகள் மற்றும் தீர்வு தேவைப்படும் துறைகள் ஆகியவற்றை மக்களிடமிருந்து விரிவாகக் கேட்டறிந்தனர். PRA முறைகள் மக்களை செயலில் ஈடுபடுத்துவதால், அவர்கள் தங்கள் தேவைகள், சவால்கள், நில வளம், நீர் ஆதாரங்கள், கால்நடை வளங்கள் போன்றவற்றைத் தாமே வரைபடங்கள் மூலம் வெளிப் படுத்தும் சூழல் உருவாக்கப்பட்டது. இதன் மூலம் கிராமத்தின் சமூக அமைப்பு மற்றும் வளவாய்ப்புகளை மாணவிகள் தெளிவாகப் புரிந்துகொண்டதுடன், மக்கள் பார்வையில் இருந்து விவசாய மற்றும் வாழ்வாதார பிரச்சினைகளை அணுகுவது எவ்வளவு முக்கியம் என்பதையும் கற்றுணர்ந்தனர். PRA செயல்பாடுகள் மூலம் சமூக பங்கேற்பு, ஒருங்கிணைப்பு, பிரச்சினைகளை அடையாளம் காணும் திறன் மற்றும் நிலைத்திருக்கும் தீர்வுகளை திட்டமிடும் நடைமுறை பற்றிய அனுபவத்தை மாணவர்கள் நேரடியாகப் பெற்றனர். இந்த செயல்முறை அவர்களின் களத்திறனை மேம்படுத்தியதோடு, கிராம வளர்ச்சி திட்டங்கள் எப்படி உருவாக்கப்பட வேண்டும் என்பதையும் முழுமையாக அறிந்து கொள்ள உதவியது.

# விதை பந்து தயாரிப்பு – பசுமை பாதுகாப்புக்கான எளிய முயற்சி



திருச்சி, ஜன.30

பசுமை வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை நோக்கமாகக் கொண்டு, மதர் தெரேசா வேளாண்மை கல்லூரி மாணவிகள் விதை பந்து தயாரிப்பு குறித்த செய்முறை விளக்க நிகழ்ச்சி இன்று நடத்தினர். இந்த நிகழ்ச்சியில் மாணவிகள் மற்றும் பொதுமக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில், மண், இயற்கை உரம் மற்றும் மரவிதைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி விதை பந்து தயாரிக்கும் முறையை விளக்கினர். விதை பந்துகள் மழைக்காலத்தில் காலி நிலங்கள், சாலையோரங்கள் மற்றும் வனப்பகுதிகளில் வீசப்படும் போது, தானாக முளைத்து மரங்களாக வளர்வது இதன் சிறப்பம்சமாகும். விதை பந்து முறையால் குறைந்த செலவில் அதிக மரங்களை வளர்க்க முடியும் என்றும், வறட்சி மற்றும் மண் அரிப்பை கட்டுப் படுத்த இது உதவுகிறது என்றும் வல்லுநர்கள் தெரிவித்தனர். இந்த முயற்சி மாணவிகளில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை அதிகரிக்கும் ஒரு முக்கியமான படியாக அமைந்தது. பசுமையான எதிர்காலத்தை உருவாக்க அனைவரும் விதை பந்து தயாரிப்பில் ஈடுபட வேண்டும் என நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

# முட்டையில் மஞ்சள் நிறத்தை அதிகரிக்கும் வழிமுறையை விளக்கிய கல்லூரி மாணவிகள்

மதுரை, ஜன.30

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுக்காவில் செல்லம்பட்டி என்ற கிராமத்தில் RAWE திட்டத்தின் கீழ் தங்கி பயின்று வரும் கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் இறுதியாண்டு பயின்று வரும் மாணவிகளான முனிசா, தருணிகா, ஜீவிதா, கோபிகா, அன்சல்னா, நெஷ்மிக்கா மற்றும் அஜிதா ஆகியோர் இணைந்து முட்டையில் மஞ்சள் நிறத்தை அதிகரிக்க மேரிகோல்ட் (செவ்வந்திப்பூ) தீவனம் கொடுக்க வேண்டும். இந்த மேரிகோல்ட் பூவில் லூட்டின் (Lutein) மற்றும் ஜீயாக்ஸாந்தின் (Zeaxanthin) என்ற இயற்கை கரோட்டினாய்டுகள் அதிகமாக உள்ளன. இவை முட்டையின் மஞ்சள் நிறத்தை இயற்கையாக ஆழமாக மாற்று கின்றன.



**பயன்படுத்தும் முறைகள் :** மேரிகோல்ட் பூ உலர் தூள் உலர்த்திய பூக்களை பொடியாக்கி தீவனத்தில் கலக்கலாம்.

**அளவு :** 1 கிலோ தீவனத்திற்கு 5-10 கிராம் மேரிகோல்ட் பொடி. மேரிகோல்ட் எக்ஸ்ட்ராக்ட் கோழி தீவனக் கடைகளில் கிடைக்கும். 7-10 நாட்களில் மஞ்சள் நிறத்தில் மாற்றம் காணலாம். இதனால் முட்டைக்கு சந்தையில் நல்ல மதிப்பு கிடைக்கும்.



# கிராம விவசாயிகளுக்கு சிறப்பு பயிற்சி நடத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்

செங்கல்பட்டு, ஜன.30

செங்கல்பட்டு மாவட்டம், பாபுராயன் பேட்டையில் இயங்கி வரும் எஸ்.ஆர்.எம் வேளாண்மை அறிவியல் கல்லூரியை சேர்ந்த தோட்டக்கலை துறை தர்ஸ்டோன் குழு மாணவர்கள் 11 பேர் (விக்னேஷ், ஜெயசூர்யா, தமிழ்மணி, நித்தீஷ் குமார், ரூபன் ராஜ், ஜீவானந்தம், ஹரிஹரன், சுதர்சன் சக்தி, செல்வபதி, சாம் சுந்தர், யோகேஸ்வரன்.) ஆகியோர் கிராம தோட்டக்கலை பணி அனுபவத் திட்டத்தையொட்டி சித்தாமூர் வட்டம் மேட்டு கொளத்தூர் கிராமம் விவசாயிகளுக்கு சிறப்பு பயிற்சி முகாம் டிசம்பர் 26யில் அளித்தனர். இதில் பேராசிரியர் கண்ணன் காய்கறி பயிர் சாகுபடி தொழில்நுட்பம் மற்றும் தர்பூசணி சாகுபடிக்கு உகந்த மண், காலநிலை, இரகம், உரம் மேலாண்மை, வளர்ச்சி ஊக்கிகள் தெளித்தல், களை மேலாண்மை, அறுவடை மற்றும் சந்தைப்படுத்துதல் பற்றியும் , பேராசிரியர் முருகன் காய்கறிப் பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை அங்கங்கள் (உழவியல் முறை, ஒழுங்கு நடைமுறைகள், மரபு சார்ந்த நடைமுறைகள், உயிரியல் முறைகள்) பற்றியும் ,பேராசிரியர் ரகேஸ்வரி செல்வராஜ் ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை அங்கங்களில் உயிரியல் மற்றும் இரசாயன முறைகள் பற்றியும் பயிற்சி அளித்தனர். இதில் ஏராளமான ஊர் மக்கள் ஆர்வமுடன் கலந்துகொண்டு சந்தேகங்களை கேட்டறிந்து பயன் பெற்றார். மேலும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மற்றும் நோய் மேலாண்மையின் முக்கியத்துவத்தை அறிந்து கொண்டனர். மேலும் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை மூலம் ரசாயன உரங்களின் அளவை குறைத்தும், மண் மற்றும் சுற்றுச்சூழல் மாசுபடுதல் குறித்து குறித்து எஸ்.ஆர்.எம் தோட்டக்கலை நான்காம் ஆண்டு தர் ஸ்டோன் குழு மாணவர்கள் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.



# கிராம சபை கூட்டத்தில் வேளாண் கல்லூரி மாணவர்கள் பங்கேற்பு

நாகப்பட்டினம், ஜன.30

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூரில் அமைந்துள்ள வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயின்று வரும் மாணவர்கள் தற்போது மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் வட்டாரத்திற்கு ஒதுக்கப்பட்டு, கிராமப்புற வேளாண் பணிகள் தொடர்பான பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.




இந்த பயிற்சியின் ஒரு பகுதியாக, குத்தாலம் வட்டாரத்தில் உள்ள வில்லியநல்லூர் கிராமத்தில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் வேளாண் கல்லூரி மாணவர்களான அரவிந்த், ஞான சூரியன், மணி முருகன், லோகேஷ் வர்மா ஜெகநாத், பிரவீன் பிரசாந்த், ரமணா, யாகவா குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த கிராம சபை கூட்டத்தின் மூலம், கிராம சபையின் செயல்பாடுகள், அதன் முக்கியத்துவம் மற்றும் கிராம வளர்ச்சிக்கான தீர்மானங்கள் குறித்து மாணவர்கள் முழுமையாக அறிந்து கொண்டனர். மேலும், பொதுமக்களின் நலனுக்காக அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்கள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன், தற்போதைய சூழலில் மக்களின் உடல்நல பாதுகாப்பிற்காக அரசு மேற்கொண்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. குறிப்பாக, தற்போது பரவி வரும் டெங்கு நோயைத் தடுப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு முறைகள், சுற்றுப்புற சுத்தம் பேணுதல், நீர் தேக்கம் ஏற்படாமல் தடுப்பது உள்ளிட்ட முக்கிய அறிவுரைகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

# சர்க்கரை ஆலைக்கு களப்பயணம் மேற்கொண்ட வேளாண் கல்லூரி மாணவர்கள்

நாமக்கல், ஜன.30

நாமக்கல் மாவட்டம், பிஜிபி வேளாண் கல்லூரி மாணவர்கள் தங்கள் இறுதியாண்டு பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக கிராமப்புற அனுபவ பயிற்சி (RAWE) மேற்கொண்டு வருகின்றனர். அதன் தொடர்ச்சியாக ஈரோட்டில் அமைந்துள்ள சக்தி சர்க்கரை தொழிற்சாலைக்கு களப்பயணம் மேற்கொண்டனர்.




அங்கு, அந்நிறுவனத்தின் HR ராபர்ட் உடன் மாணவர்கள் கலந்துரையாடினர். அந்த கலந்துரையாடலின் மூலம் சர்க்கரை உற்பத்தி செயல்முறை, சர்க்கரை உற்பத்தியில் இருந்து கிடைக்கும் துணைப் பொருட்களின் தயாரிப்பு, வெப்ப மின் உற்பத்தி செயல்முறை, தொழிற்சாலையின் நிர்வாக அமைப்பு, கரும்பு கொள்முதல் நடைமுறைகள் போன்றவற்றை அறிந்து கொண்டனர்.

மேலும், வேளாண் பட்டதாரி மாணவர்களுக்கு ஏற்ற Cane Officer பணிவாய்ப்பு குறித்தும் அதன் பணிச்சூழல், பொறுப்புகள் குறித்து தெளிவான விளக்கம் வழங்கப்பட்டது. இக்களப்பயணம் மாணவர்களுக்கு தொழில்துறை சார்ந்த நடைமுறை அறிவை மேம்படுத்த உதவியதாக மாணவர்கள் தெரிவித்தனர்.